செய்தி வெளியீடு 1569 நாள்.11.09.2022

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி இன்று (11.09.2022) தமிழகம் முழுவதும் நடைபெற்ற 36வது சிறப்பு மெகா கோவிட்– 19 தடுப்பூசி முகாமில் 12.62 இலட்சம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்களில் என மொத்தம் 50,000 சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற 35 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்களில் 5 கோடியே 22 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

இதுவரை (11–09–2022) 12–14 வயதுயுடைய **19,82,269 (93.46%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **15,31,542 (72.21%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 15–17 வயதுயுடைய **30,52,562 (91.23%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **25,89,018 (77.38%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை வழங்கப்பட்டுள்ளது மற்றும் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசியாக மொத்தம் **79,68,331 (18.92%)** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று (11–09–2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாமில் 12 வயதிற்கு மேற்பட்ட **12,62,089** பயனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக **61,202** பயனாளிகளுக்கும் இரண்டாவது தவணையாக **2,98,634** பயனாளிகளுக்கும் மற்றும் **9,02,253** பயனாளிகளுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 18 வயதிற்கு மேற்பட்டோரில் **96.49%** முதல் தவணையாகவும் **91.09%** இரண்டாம் தவணையாகவும் கோவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாநிலத்தில் இன்று (11.09.2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை முன்னிட்டு நாளை (12.09.2022) கோவிட் தடுப்பூசி பணிகள் நடைபெறாது என தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in